
**ஆகஸ்ட் – 26**

# TNPSC துளிகள்

- பாதுகாப்புப் படைகள், அரசுத் துறைகள் மற்றும் குடிமை நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை அதிகரிக்கும் வகையில், அசாமின் தின்சுகியா மாவட்டத்தில் உள்ள லைபுலி எனுமிடத்தில், சமன்வய் சக்தி 2025 என்ற பயிற்சி தொடங்கப்பட்டது.
- நவி மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுக அறக்கட்டளை (JNPT) மற்றும் பால்கரில் உள்ள வாதவன் துறைமுகம் இடையே ஹைப்பர் லூப் எனும் அதிவேகப் போக்குவரத்து அமைப்பு மூலமான சரக்கு வழித்தடத்தினை இயக்க உள்ள உலகின் முதல் பிராந்தியமாக மகாராஷ்டிரா மாநிலம் மாற உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சிறுவர்களால் ஏற்படும் விபத்துகள்





- மாநில வாரியான தரவுகளின்படி, அதிக எண்ணிக்கையிலான சிறார்களால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கையுடன் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதும் பதிவான மொத்தம் 11,890 விபத்துகளில் 2,063 விபத்துகள் தமிழ்நாட்டில் பதிவாகியுள்ளன.
- இந்தத் தரவு ஆனது 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சாலை விபத்துத் தரவுத்தள (iRAD) அமைப்பை அடிப்படையாகக் கொண்டது.
- அதே தரவுகளின் படி மத்தியப் பிரதேசத்தில் 1,138 விபத்துகளும், மகாராஷ்டிராவில் 1,067 விபத்துகளும் பதிவாகியுள்ளன.
- தமிழ்நாடு காவல்துறையானது, iRAD அமைப்பைப் பயன்படுத்தி இந்தக் கூற்றுகளைச் சரி பார்க்கும் போது, 2023 ஆம் ஆண்டில் 204 விபத்துக்களும், 2024 ஆம் ஆண்டில் 269 விபத்துக்களும் உட்பட 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மாநிலத்தில் சிறார்களால்

ஏற்பட்ட விபத்துகள் 473 மட்டுமே எனக் கண்டறிந்தது.

- தமிழ்நாட்டில் சிறார் குற்றவாளிகளின் பாதுகாவலர்கள் மற்றும் பெற்றோருக்கு வழங்கப் பட்ட சலான்களின் (கட்டண ரசீதுகளின்) எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 41 ஆகவும், 2024 ஆம் ஆண்டில் 80 ஆகவும் இருந்தது.
- பீகாரில் சிறார்களுக்கு வழங்கப்பட்ட சலான்கள் அதிகபட்ச எண்ணிக்கையில் 1,316 ஆக பதிவாகியுள்ளன என்பதோடு இது 44.27 லட்சம் ரூபாய் வருவாயை ஈட்டியது.
- தமிழ்நாட்டில் விபத்து மற்றும் குற்றத் தரவுகள் ஆனது குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகளின் (CCTNS) ஒரு பகுதியாக உள்ள மாநிலக் குற்றப் பதிவு வாரியம் (SCRB) மூலம் iRAD தளத்தில் பதிவேற்றப்படுகின்றன.
- தமிழ்நாடு விபத்துத் தரவை iRAD தளத்தில் பதிவேற்றுவதில் 90 சதவீதத்திற்கும் அதிகமான செயல்திறனைப் பேணி வருகிறது, ஆனால் பிற மாநிலங்களின் இத்தரவுத் தரத்தை அதனால் சரிபார்க்க இயலவில்லை.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், மாநிலத்தில் பதிவான சாலை விபத்துகளில் 17 சதவீதம் சரிவு பதிவாகியுள்ளது.
- இந்த காலக் கட்டத்தில் 2,576 விபத்துகளும், 2,678 உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன.
- இது 2024 ஆம் ஆண்டின் இதே மாதங்களில் 3,110 விபத்துகளும், 3,253 உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

# தேசியச் செய்திகள்

## புற்றுநோய் நோய் குறித்த பாராளுமன்றக் குழு




- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் புற்றுநோயை ஒரு அறிவிக்கத் தக்க நோயாக அறிவிக்குமாறு பாராளுமன்றக் குழுவானது பரிந்துரைத்து உள்ளது.
- தற்போது, தேசியப் புற்றுநோய் பதிவுத் திட்டம் (NCRP) ஆனது இந்தியாவின் மக்கள் தொகையில் சுமார் 18% பேரை மட்டுமே உள்ளடக்கியதாக உள்ளது.
- புற்றுநோயை அறிவிக்கத்தக்க நோயாக அறிவிப்பது நிகழ்நேர அறிக்கையிடலை மேம்படுத்தும், இலக்கு சார்ந்த நடவடிக்கைகளை ஆதரிக்கும் மற்றும் சான்றுகள் சார்ந்த கொள்கை வகுப்பைச் செயல்படுத்தும்.
- புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் நலச் சேவைக்கு நிதியளிப்பதற்காக புகையிலை

பொருட்களுக்கு அதிக ஆபத்துள்ளப் பொருட்களுக்கான வீத வரி அல்லது அதிக வரி விதிக்கவும் குழு முன்மொழிந்தது.

- வாய் சார்ந்த புற்றுநோய் ஆனது ஆண்டுதோறும் 60,000க்கும் மேற்பட்ட புதியதானப் பாதிப்புகளையும், ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஐந்து உயிரிழப்புகளையும் ஏற்படுத்துகிறது.

## AIBD நிர்வாகக் குழுவின் புதியத் தலைமை





- தாய்லாந்தின் ஃபூகெட்டில் நடைபெற்ற 23வது பொது மாநாட்டில், ஆசிய-பசிபிக் ஒளிபரப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் (AIBD) நிர்வாகக் குழுவின் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியா இந்தத் தலைமைப் பொறுப்பினை மீண்டும் ஏற்றுள்ளது.
- AIBD என்பது ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (UNESCO) கீழ் 1977 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு பிராந்திய அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது பல கண்டங்களில் உள்ள அரசு மற்றும் துணை உறுப்பினர்கள் உட்பட 45 நாடுகளைச் சேர்ந்த 92 க்கும் மேற்பட்ட உறுப்பினர் அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- பிரச்சார் பாரதி தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தை பிரதிநிதித்துவப் படுத்தச் செய்வதுடன், இந்தியா AIBD அமைப்பின் நிறுவன உறுப்பினராகவும் உள்ளது.
- இந்த மாநாடு "Media for People, Peace and Prosperity" என்ற கருத்துருவின் கீழ் ஊடக ஒத்துழைப்பில் கவனம் செலுத்தியது.

## ஹோம்ஸ்டேக்கள் குறித்த நிதி ஆயோக் அறிக்கை

- இந்திய இணையம் மற்றும் கைபேசி சங்கத்துடன் (IAMAI) இணைந்து, "Rethinking Homestays: Navigating Policy Pathways" என்ற தலைப்பில் நிதி ஆயோக் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

- இந்தியாவின் சுற்றுலாத் துறையில் ஹோம்ஸ்டேகள் மற்றும் படுக்கை வசதி மற்றும் காலை உணவு வழங்கலின் (BnBs) திறனை வெளிக் கொணர்வதற்கான ஓர் உத்திசார் செயல் திட்டத்தினை இந்த அறிக்கை வழங்குகிறது.
- சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, பாரம்பரியத்தின் பாதுகாப்பு மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கான மிதமான, வெளிப்படையான விதிமுறைகளை இது வலியுறுத்துகிறது.




## நகர்ப்புறப் பகுதியின் வரையறை

- நகரமயமாக்கல் போக்குகளின் நிலையான ஒப்பீட்டை உறுதி செய்வதற்காக, 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்ட அதே நகர்ப்புறப் பகுதியின் வரையறையை 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பும் கொண்டிருக்கும்.
- ஒரு நகர்ப்புற அலகு அல்லது 'மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரம்' என்பது
  - குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமம்,
  - சதுர கிலோமீட்டருக்கு 400 பேர் கொண்ட மக்கள் தொகை அடர்த்தி, மற்றும்
  - குறைந்தபட்சம் 75% என்ற எண்ணிக்கையிலான உழைக்கும் ஆண்கள் வேளாண் சாரா வேலைகளில் ஈடுபட்டுள்ள பகுதி என வரையறுக்கப்படுகிறது.
- 2011 ஆம் ஆண்டில், 31.2% மக்கள் நகர்ப்புறங்களிலும், 68.8% மக்கள் கிராமப் புறங்களிலும் வசித்து வந்ததுடன் இந்தியாவில் 15,870 நகர்ப்புற அலகுகள் மற்றும் நகரங்கள் இருந்தன.
- 1951 ஆம் ஆண்டில் 17.3% ஆக இருந்த நகர்ப்புற மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டில் 31.2% ஆக உயர்ந்ததுடன், 2011 ஆம் ஆண்டில் மொத்தக் கிராமங்களின் எண்ணிக்கை 640,867 ஆக இருந்தது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரையிலான அதிகார வரம்பு மாற்றங்களைப் பிரதிபலிக்கும் கிராமங்கள் மற்றும் நகரங்களின் புதுப்பிக்கப்பட்ட பட்டியல்களைத் தயாரிக்குமாறு இந்தியத் தலைமைப் பதிவாளர் அலுவலகம் ஆனது மாநிலங்களுக்கு அறிவுறுத்தியது.

- சட்டப்பூர்வ நகரங்கள் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று அவை இருக்கும் நிலையிலேயே கணக்கிடப்படும்.
- இது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்பு நிர்வாக எல்லைகள் முடக்கப்படும் தேதி ஆகும்.
- 2027 ஆம் ஆண்டில் 5,000 எண்ணிக்கையை எட்டியிருக்க வாய்ப்புள்ள கிராமங்களை அடையாளம் காண்பதற்காக, 2011 ஆம் ஆண்டில் 4,000 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராமங்கள் ஆய்வு செய்யப்படும்.
- வேளாண்மை, தோட்டங்கள், கால்நடைகள், வனவியல், மீன்பிடித்தல், வேட்டையாடுதல் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆண் தொழிலாளர்கள் வேளாண் சாரா வகையிலிருந்து விலக்கப்படுகிறார்கள்.
- மாவட்ட அல்லது துணைப்பிரிவு தலைமையகங்கள் ஆனது மக்கள்தொகை அளவுருக்களைப் பூர்த்தி செய்து சட்டப்பூர்வ நகரங்களாக இல்லாவிட்டால் மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரங்களாக வகைப்படுத்தப்படும்.
- பல கிராமங்களை ஒரே மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரமாக தொகுக்க இதில் அனுமதிக்கப்படவில்லை; எனவே ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி அலகாகக் கருதப் படும்.
- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்புடன் தொடங்கப் படும், மேலும் மக்கள் தொகை கணக்கெடுப்புக் கட்டம் ஆனது 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்படும்.
- மக்கள் தொகை கணக்கெடுப்பு செயல்பாட்டில் பயன்படுத்துவதற்காக நிர்வாக எல்லைகள் ஆனது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் முடிவு செய்யப்பட வேண்டும்.

**Number of UAs/Towns and OGs in India**

| Type of Urban Units | 2011 Census | 2001 Census |
|---|---|---|
| 1. Towns: | 7,935 | 5,161 |
| (a) Statutory Towns | 4,041 | 3,799 |
| (b) Census Towns | 3,894 | 1,362 |
| 2. Urban Agglomerations | 475 | 384 |
| 3. Out Growths (OGs) | 981 | 953 |


# சர்வதேசச் செய்திகள்

## ட்ருஷ்பா குழாய்

- ரஷ்யாவின் ட்ருஷ்பா எண்ணெய் குழாய் தடத்தில் மேற்கொள்ளப்பட்ட உக்ரைனின்

ஆளில்லா விமானம் மற்றும் எறிகணைத் தாக்குதல்களை அடுத்து, ஹங்கேரி மற்றும் ஸ்லோவாக்கியா எண்ணெய் விநியோக இடையூறுகளை எதிர்கொண்டுள்ளதாக அறிவித்தன.

- ரஷ்ய எண்ணெயை ஹங்கேரி மற்றும் ஸ்லோவாக்கியாவிற்கு கொண்டு செல்கின்ற ட்ருஷ்பா குழாய் தடமானது, ரஷ்ய-பெலாரஷ்ய எல்லைக்கு அருகில் செல்கிறது.
- 2022 ஆம் ஆண்டிற்குப் பிறகு விதிக்கப்பட்ட ரஷ்ய எண்ணெய் இறக்குமதி மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையிலிருந்து ட்ருஷ்பா குழாய் தடத்திற்கு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## 2003 ஆம் ஆண்டு FRBM சட்டத்தின் கீழ் நிதி நிலைத்தன்மை முன்னேற்றம்

| Fiscal Indicators - Rolling Targets as a Percentage of GDP | | |
|---|---|---|
| | Revised Estimates | Budget Estimates |
| | 2024-25 | 2025-26 |
| 1. Fiscal Deficit | 4.8 | 4.4 |
| 2. Revenue Deficit | 1.9 | 1.5 |
| 3. Primary Deficit | 1.3 | 0.8 |
| 4. Tax Revenue (Gross) | 11.9 | 12.0 |
| 5. Non-Tax Revenue | 1.6 | 1.6 |
| 6. Central Government Debt | 57.1 | 56.1 |

- தலைமைக் கணக்காளர் மற்றும் தணிக்கையாளரின் (CAG), நிதியியல் பொறுப்பு மற்றும் நிதி ஒதுக்கீட்டு மேலாண்மை (FRBM) சட்டத்தின் 2023–24 ஆம் ஆண்டு மதிப்பாய்வு ஆனது, இந்தியா நீண்டகாலப் பெரும் பொருளாதார நிலைத்தன்மையை நோக்கி முன்னேறி வருவதைக் காட்டுகிறது.

- மத்திய அரசின் கடன் ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 57% ஆகக் குறைந்துள்ளது என்பதோடு இது 2020–21 ஆம் நிதி ஆண்டில் (FY) 61.38% ஆக இருந்தது.
- 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 83% ஆக இருந்த பொது அரசுக் கடன் (GGD) 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 81.3% ஆக சற்று குறைந்து உள்ளதோடு, இது 60% இலக்கை விட அதிகமாகும்.
- கடன் நிலைத்தன்மைப் பகுப்பாய்வு (DSA), நிலையான அல்லது வீழ்ச்சியடைந்து வரும் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை நிலையான நிதிக் கொள்கையின் ஒரு அடையாளமாகக் கருதுகிறது.
- 2023–24 ஆம் நிதியாண்டின் இறுதியில் 31.11 லட்சம் கோடியாக இருந்த இது 2022–23 நிதியாண்டு முதல் 9.81 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஐந்தாம் தலைமுறை நுட்பத்திலான மேம்பட்ட நடுத்தர தூரத் தாக்குதல் வரம்புடைய போர் விமானம்




- இந்தியா தனது ஐந்தாம் தலைமுறை நுட்பத்திலான மேம்பட்ட நடுத்தர தூரத் தாக்குதல் வரம்புடைய போர் விமானத்திற்கான (AMCA) இயந்திரங்களை இணைந்து உருவாக்கி உற்பத்தி செய்ய சாஃப்ரான் எனும் பிரெஞ்சு நிறுவனத்துடன் இணைந்து செயல்பட உள்ளது.
- சாஃப்ரான் நிறுவனமானது, AMCA விமானத்தின் இரட்டை இயந்திர உள்ளமைவுக்காக ஆஃப்டர்பர்னர் எனும் உபரி எரிபொருள் எரிப்பு எந்திரத்துடன் 120 கிலோநியூட்டன்கள் (kN) வரையிலான உந்துதலை வழங்குவதற்காக அதன் M88 இயந்திரத்தை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- பாதுகாப்புத் துறையில் இந்தியாவின் தன்னிறைவுக்கான உந்துதலுடன் ஒன்றும் வகையில், AMCA விமானத்தின் முதல் விமான இயக்கமானது, 2028 ஆம் ஆண்டினை இலக்காகக் கொண்டு, 2026–27 ஆம் ஆண்டிற்குள் அதன் முன்மாதிரிகள் உருவாக்கப்

படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன.

❖ உள்நாட்டு வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதற்காக வேண்டி இந்தியாவில் எரிவாயு விசையாழி தொழில்நுட்பத்திற்கான ஒரு சிறப்பு மையத்தை அமைக்கவும் சாஃப்ரான் திட்டமிட்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## அதிகரிக்கும் வெப்பம் மற்றும் வேலைத் திறன்

❖ உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் உலக வானிலை அமைப்பு (WMO) ஆகியவை Climate Change and Workplace Heat Stress (பருவநிலை மாற்றம் மற்றும் பணியிட வெப்ப அழுத்தம்) என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டன.

❖ 20 டிகிரி செல்சியஸுக்கு மேல் உள்ள ஒவ்வொரு டிகிரி வெப்பநிலைக்கும் வேலை உற்பத்தித் திறன் 2 முதல் 3 சதவீதம் வரை குறைகிறது என்று அறிக்கை கூறுகிறது.


❖ உலக மக்கள்தொகையில் குறிப்பாக இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஏறத்தாழ பாதி பேர் அதிக வெப்பநிலையால் பாதிக்கப்படுகின்றனர்.

❖ இந்தியாவில் அதிகாலை வெப்பநிலை உயர்வு ஆனது உட்புற மற்றும் வெளிப்புற வேலைகளில் வேலைத் திறனை கணிசமாகக் குறைக்கிறது.

❖ வெப்ப அழுத்தம் ஆனது நீரிழப்பு, அதிக வெப்பத்தினால் ஏற்படும் பக்கவாதம், சிறுநீரகச் செயலிழப்பு மற்றும் நரம்பியல் கோளாறுகள் போன்ற பல்வேறு சுகாதார அபாயங்களை அதிகரிக்கிறது.

❖ ஈரக்குமிழ் வெப்பநிலையில் (WBGT) பதிவாகும் ஒவ்வொரு மணி நேர அதிகரிப்பானது வெப்பம் அதிகம் வெளிப்படும் சூழலிலான தொழில்களில் அதிக உற்பத்தித்திறன் இழப்பை ஏற்படுத்துகிறது.

❖ தினசரி வானிலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் பருவகால மாற்றங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்த வருமானம் மற்றும் அதிக சுகாதாரச் செலவுகள் போன்ற இரட்டைச் சுமையை உருவாக்குகின்றன.




# மாநிலச் செய்திகள்

## ரன் சம்வாத்

❖ மத்தியப் பிரதேசத்தின் மோவில் உள்ள இராணுவப் போர் கல்லூரியில் போர் மற்றும்

போர்முறை குறித்த அதன் முதல் உலகளாவிய நிகழ்வான ரன் சம்வாத் நிகழ்வினை பாதுகாப்பு அமைச்சகம் நடத்த உள்ளது.

- இந்த நிகழ்வு ஆனது போர், போர்முறை மற்றும் போர் சண்டையின் நடைமுறை அம்சங்களில் மட்டுமே கவனம் செலுத்தும்.
- ரன் சம்வாத், முன்னாள் இராணுவ வீரர்களுக்குப் பதிலாக, பணியில் உள்ள வீரர்களை மையமாகக் கொண்டு, ரைசினா பேச்சுவார்த்தை போன்ற ஒரு வருடாந்திர நிகழ்வாக மாற்ற இலக்கு வைத்துள்ளது.





# இதரச் செய்திகள்

## முதல்வர்களுக்கு எதிரான குற்றவியல் வழக்குகள்

- ADR அறிக்கையின்படி, முதலமைச்சர்களில் நாற்பது சதவீதம் பேர் அவர்கள் மீதான குற்றவியல் வழக்குகளைக் கொண்டுள்ளனர்.
- இந்தியாவில் முப்பது முதலமைச்சர்களில் பன்னிரண்டு பேர் (முதல்வர்கள்) மீது குற்றவியல் வழக்குகள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ரேவந்த் ரெட்டி (தெலுங்கானா) அதிகபட்சமாக 89 வழக்குகளையும், அதைத் தொடர்ந்து M.K. ஸ்டாலின் (தமிழ்நாடு) 47 வழக்குகளையும் கொண்டுள்ளார்.
- சந்திரபாபு நாயுடு (ஆந்திரப் பிரதேசம்) 19 வழக்குகளையும், சித்தராமையா (கர்நாடகா) 13 வழக்குகளையும், ஹேமந்த் சோரன் (ஜார்க்கண்ட்) ஐந்து வழக்குகளையும் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- தேவேந்திர ஃபட்னாவிஸ் (மகாராஷ்டிரா) மற்றும் சுக்விந்தர் சிங் (இமாச்சலப் பிரதேசம்) ஆகியோர் மீது தலா நான்கு வழக்குகளும், பினராயி விஜயன் (கேரளா) மீது இரண்டு வழக்குகளும், பகவந்த் மான் (பஞ்சாப்) ஒரு வழக்கும் உள்ளன.
- பத்து முதலமைச்சர்கள் (33%) மீது கொலை முயற்சி, கடத்தல், லஞ்சம் வாங்குதல் மற்றும் மிரட்டல் போன்ற கடுமையான குற்ற வழக்குகள் இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- கடுமையான குற்றச்சாட்டுகளின் பேரில் 30 நாட்கள் கைது செய்யப்பட்ட பிரதமர்கள்,

முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்வதற்கான மசோதாக்களை மத்திய அரசு அறிமுகப்படுத்தியதை அடுத்து இந்த அறிக்கை வெளியிடப் பட்டது.

- ஜனநாயகச் சீர்திருத்த சங்கம் (ADR) இதனை ஒரு பகுப்பாய்வு அறிக்கையில் கூறியது:




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★